RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s310

OPEN ACCESS

# படைப்பாளர் சல்மாவின் பார்வையில் சமகால இஸ்லாமிய பெண்களின் நிலை

**இ. முன்னி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# The Status of Contemporary Islamic Women in the Perspective of Creator Salma

**I. Munni [a, *]**

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai–600032, Tamil Nadu, India

* Corresponding Author: aliashifa04@gmail.com

Received: 18-04-2021
Revised: 30-04-2022
Accepted: 06-05-2022
Published: 15-07-2022

Check for updates

**ABSTRACT**

Feminism is the struggle for women's liberation. That means a woman is as independent as a man. She is not inferior in any capacity or in any way. She fights to reclaim this right for herself. In that struggle, she is not an enemy to the man. She is the enemy of his supremacy and power. She wants to involve him in the struggle. If he stands in their way, she will defeat him and fight to get freedom for both of them. In the absence of economic security, social rights, and political recognition for women, women are suffering because they cannot decide their own lives. Through her novels, Salma emphasises the rights and liberation of Muslim women. Those women are also human beings in every way. He emphasises through the female character that they have all kinds of emotions.

**Keywords:** Feminism, Social Rights, Contemporary Islamic Women, Muslim Women

## முன்னுரை

சங்ககாலத்தில் பெண்கள் பலர் தங்களுடைய படைப்புகளை எழுதியுள்ளனர். சங்கப் பெண் புலவர்களின் எண்ணிக்கை விட இக்கால பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கை குறைவு. காரணம் பெண்களின் குடும்ப சூழ்நிலை, சமூகத்திற்கு கட்டுப்பட வேண்டிய நிர்பந்தம், குடும்பத்தாரே எதிர்ப்பு தெரிவிப்பது, நேரமின்மை, சுதந்திரமின்மை முதலிய பல காரணங்களை கூறலாம். இக்கால பெண் எழுத்தாளர்களிடையே மிகப் பரவலாக பெண்ணியம் பேசப்படுகிறது. பெண்ணியம் என்பது பெண்களின் எல்லா சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை களைய முற்படுவதாகும். பெண்கள் எல்லா நாடுகளிலும் உரிமைகளை இழந்து தவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். குறிப்பாக பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே உள்ளது. இயற்கையான உடற்கூறுகளாலும், உலகில் உள்ள ஆண் ஆதிக்கத்தாலும் பெண்கள் பெரும் அவதிக்கு ஆளாகுகிறார்கள். அவர்களது வாழ்வு ஏதோ ஒரு ஆண் ஆதரவில் தான் நிகழ வேண்டிய கட்டாயம் உள்ளது (Chandrasekarn et.al., 2019).

பெண்களுக்கு பொருளாதார பாதுகாப்பு, சமூக உரிமை, அரசியல் அங்கீகாரம் இல்லாத நிலையில் தங்களது வாழ்க்கையினை அவர்களாகவே தீர்மானித்துக் கொள்ள முடியாமல் பெண்கள் துன்பப்படுகின்றனர். சல்மா தனது புதினங்களின் மூலம் இஸ்லாமியப் பெண்களின் உரிமைகளையும், விடுதலையையும் வலியுறுத்துகிறார். அப்பெண்களும் எல்லா விதத்திலும் மனித இனம் தான்.

அவர்களுக்கு எல்லாவித உணர்ச்சிகளும் உண்டு என்பதை பெண் கதாபாத்திரத்தின் மூலம் வலியுறுத்துகிறார்.

இப்புதினத்தில் வரும் கதாபாத்திரத்தின் தன்மையும், நடவடிக்கைகளும் பெண்களின் உரிமைகளையும், விடுதலையையும் வெளிப்படுத்துபவையாகவே உள்ளன. பெண் கதாபாத்திரங்களின் உரையாடல்களும், அதன் நியாயங்களும் அனைவரையும் சிந்திக்க வைக்கின்றன. அறிவியல் வளரும் பொழுது பெண்களின் உரிமையும், விடுதலை வேட்கையும் தானாக வெளிப்படும் என்பது சல்மாவின் புதினங்களின் சாரம். இது குறித்து இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகிறது.

“இரண்டாம் ஜாமங்களின் கதை” மாந்தர்கள் குறித்து

பிர்தவ்ஸ் தனது உரிமையை நிலைநாட்டல்

பிர்தவ்ஸ் தனது தந்தையின் மரணத்திற்கு பின் அக்கா சொஹராவின் கணவர் கரீமின் கட்டுப்பாட்டில் இருந்தாள். கரீமின் ஆணாதிக்க பிடியில் சிக்கித் தவித்த பிர்தவ்ஸ், அதன் பிடியிலிருந்து விடுபட எண்ணினாள். பிர்தவ்ஸ்க்கு பணம் உள்ள அழகில்லாத, பொருத்தமில்லாத மாப்பிள்ளையை திருமணம் செய்து வைக்கிறான். தனது கணவன் யூசுப்புடன் வாழ மாட்டேன் என்று கூறிவிட்டாள்.

“பிர்தவ்ஸ்க்குத் தெரியும் தான் யூசுப்புடன் வாழ மறுப்பதற்கு அவனது தோற்றம் மட்டுமே காரணமில்லை என்பது. தனக்கு இவனை மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்த தனது மச்சான் கரீமை தோற்கடிக்க வேண்டும் என்கிற வெறி அவளிடம் இருந்தது. அவளது தந்தையின் மௌத்துக்குப் பின் இந்தக் குடும்பத்தின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட கரீம் தன் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்தையும் கொண்டு வரத் துவங்கினான். அவனுக்கு தான் வைத்தது தான் சட்டம். தன்னை மீறி யாரும் எதுவும் செய்யக்கூடாது. தன் தயவில் தான் எல்லோரும் நடக்க வேண்டும். தான் எது செய்தாலும் அது சரியாகத் தான் இருக்கும். அதை யாரும் கேள்வி கேட்கக்கூடாது.”

சல்மா தனது புதினத்தில் கரீமின் தன்மையை தெளிவுபடக் கூறுகிறார். பிர்தவ்ஸ் அவனது சொல்லை மீறி யூசுப்பை புறம்தள்ளிவிட்டு வாழ முற்படுகிறாள். படிக்காதவளாக இருந்தாலும் அழகான தனக்கு அவலட்சணமான கணவன் தேவையில்லை என்பதே பிர்தவ்ஸ்ஸின் முடிவு.

## தலாக்சட்டம்

பிர்தவ்ஸ் யூசுப்பை “குலா” சொல்லி விடுகிறாள். குலா என்றால் “மணவிலக்கு” என்று பொருள்.

## பெரியாரின் சிந்தனை

“விவாகம், விவாகரத்து, கல்வி, சொத்து, கற்பு, ஒழுக்கம், தொழில், அரசியல் முதலிய துறைகளில் ஆண்களுக்கு உள்ள சகல உரிமைகளும் பெண்களுக்கும் அறிதல் படவேண்டும். நமது பெண் மக்கள் வாழ்வதற்கு அவசியமான வகையில் உடைகளையும் நகைகளையும் சுருக்கிக் கொள்ள வேண்டும் (Thanthai Periyar, 2020).

பெண்கள் திருமணத்திலும், விவாகரத்து செய்வதிலும் சம உரிமையை பெற்றிட வேண்டும் என்று பெரியார் கூறிய சிந்தனையை சல்மா பிர்தவ்ஸ்ஸின் செயல்பாட்டின் மூலம் விளக்குகிறார். எந்த மதப் பெண்ணாக இருந்தாலும் பெண் உரிமை என்பது சமமானது என்று கருதினார் (Thanthai Periyar, 2020).

## பிர்தவ்ஸ்ஸின் தேவை

பிர்தவ்ஸ் தனது எதிர் வீட்டில் வசிக்கும் வேறு மதத்து இளைஞனான சிவாவை நினைத்து புழுங்கினாள். இதுவும் ஒரு பெண்ணின் உரிமையே என்று கூறுகிறார் (Salma, 2018). திருமணத்திற்கு


IOR PRESS

முன்பே கரீம் பிர்தவ்ஸ்சுக்கு பிடித்தமான ஆடவனைத் தேர்வு செய்திருந்தால், அவளது வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைந்திருக்கும். அவ்வுரிமை பறிபோனதால் தனது உணர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாமல் பிர்தவ்ஸ் புழுங்கினாள். அதிலிருந்து விடுபட்டு சிவாவோடு ஒன்றினாள். ஆண்கள் தங்கள் விருப்பம் போல் எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் பெண்களால் அவ்வாறு செய்ய முடிவதில்லை. பெண்களின் உரிமையின்மையை தனது புதினத்தில் வெளிப்படுத்துகிறார் (Salma, 2018).

பெண்களிடம் அனுமதி பெற்ற பின்னரே திருமணம் செய்ய வேண்டும் என்கிறது இஸ்லாம். இதற்குச் சான்றாக,

“நான் பெற்றெடுத்த பெண் தானே! நமக்குக் கட்டுப்பட்டு நாம் சொல்லும் ஆணை திருமணம் செய்ய வேண்டியது தானே என நிர்பந்தம் செய்திட எவருக்கும் உரிமை இல்லை. அப்பெண்ணிடம் அனுமதி ஒப்புதல் பெற்ற பின்னே பெண்ணை திருமணம் செய்ய வேண்டும் என்கிறது இஸ்லாம்.

## வஹிதாவின் நிலை

காதர், றைமாவிற்குப் பிறந்த வஹிதாவை காதரின் சகோதரி சபியாவின் மகன் சிக்கந்தருக்குத் திருமணம் செய்து தர நிச்சயிக்கப்பட்டது. சிக்கந்தர் வெளிநாட்டில் வேலை செய்வதோடு தகாத தீய பழக்க வழக்கங்களையும் கற்று வைத்திருந்தான். இதை தெரிந்த றைமா வஹிதாவிற்கு வேறு மாப்பிள்ளை பார்க்கலாம் என்று கூறினாள். காதர் அதனை மறுத்து விட்டான். திருமணம் நடந்தது. தந்தை காதரும், கணவன் சிக்கந்தரும் ஆண் ஆதிக்கத்தில் இருந்தார்கள் என்பதையே சல்மா தன்னுடைய புதினத்தில் பதிவு செய்கிறார். மிருகங்களைப் போல் ஒரு பெண்ணை வன்புணர்ச்சியில் ஈடுபடுத்துவது தாம்பத்தியமா? என்ற கேள்வி எழுகிறது. பெண்கள் எந்த நேரத்திலும் ஆண்களால் அனுபவிக்க வேண்டிய போகப் பொருள்கள் என்பதையே விளக்குகின்றன. இதிலிருந்து விடுதலைப் பெற்று மீள வேண்டும் என்று கூறுகிறார் (Salma, 2018).

## பெண் விடுதலை

எல்லாவித அடிமைத்தனத்திலும் பெண்ணடிமைத்தனமே கொடுமையானது என்று பெரியார் கடிந்துரைக்கின்றார். எல்லாவித வேலைகளிலும், உயர் பதவிகளிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்துவதால் பெண்களின் உரிமை பறிபோகிறது. இதற்கு சான்று பகரும் விதமாக, “மேல்ஜாதிக்காரன் கீழ்ஜாதிக்காரனை நடத்துவதை விட, பணக்காரன் தொழிலாளியை நடத்துவதை விட, எஜமான் அடிமைகளை நடத்துவதை விட, பெண்களை ஆண்கள் கொடுமையாக நடத்துகிறார்கள். இதனால்தான் நாம் எல்லோரும் அடிமைகள் வயிற்றில் பிறந்து அடிமைகளாகவே வளர்க்கப்பட்டோம் (Mohamed Maideen Ulavi, 2018).”

## பெரியாரின் சிந்தனை

வஹிதாவைப் போல், பிர்தவ்ஸைப் போல் ஏராளமான பெண்கள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களெல்லாம் தங்கள் விடுதலையை தாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இதை தீர்க்கமாக உரைக்கிறார் (Thanthai Periyar, 2020).

## பாத்திமாவின் துணிவு

பாத்திமா வீட்டு வேலை பார்ப்பவள். இவளுக்கு இலியாஸ் என்ற மகன் உள்ளான். இவள் முருகன் என்பவருடன் தொடர்பு வைத்திருந்தாள். முருகனோடு உடன்போக்கு மேற்கொண்டாள். ஊர் முழுக்க தவறாக பேசினர்.

## ஷெரிபாவின் உள்ளுணர்வு

ஷெரிபா இளம் வயதிலேயே அப்துல்லாவைத் திருமணம் செய்து விதவையாகிப் போனவள். திருமணம் முடிந்தவுடன் பணம் சம்பாதிப்பதற்காக வெளிநாடு சென்றவன் மீண்டும் வரவே இல்லை. அவனது நினைவுகளிலேயே வாழ்ந்து வரும் ஷெரிபா அவ்வூரிலுள்ள உறவு வீட்டுக்காரர்களின் எந்த சுப காரியங்களுக்கும் சென்று வருவதை தவிர்த்தாள். ஷெரிபாவின் தாய் சவுரா அவளை எவ்வளவோ சமாதானப்படுத்தினாலும் ஷெரிபாவின் உள்ளம் அமைதி அடையவில்லை.

ஷெரிபா போன்ற இளம் விதவைகளின் மனக் குமுறல்களும், அழுத்தமும் அவர்களது கடைசி காலம் வரை அவர்களுடனே உறைந்து போவதாகவே உள்ளன. சமூகத்தின் நிராகரிப்பும், புறக்கணிப்பும் ஷெரிபா போன்ற பெண்களின் மனநிலையைக் காயப்படுத்தி அவர்களை கொடுமைகளுக்கு உள்ளாக்குகிறது. ஒவ்வொரு வீட்டில் நடக்கும் சுப காரியங்களையும் பார்த்து பார்த்து மனதிற்குள் புழுங்கிப் போய் தனது சுதந்திரத்தை இழந்து விட வேண்டிய நிலைக்கு விதவைப்பெண்கள் தள்ளப்படுகிறார்கள். ஷெரிபாவின் மன இறுக்கத்தை தனது புதினத்தில் துல்லியமாக பதிவுச் செய்கிறார் (Salma, 2018).

## மனாமியங்கள் நாவலில் வரும் கதாபாத்திரங்கள் குறித்து

## மெஹருன்னிஷாவின் அவலம்

மெஹருன்னிஷாவின் கணவன் ஹசன். சவுதி அரேபியாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சவுதியில் இருந்து வந்தவுடன் இரண்டாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டான். அதோடு தனது மனைவி மெஹருன்னிசாவையும், தாய் சுபேதாவையும் அடக்குமுறையில் வைத்து எந்த உரிமையும் கொடுக்காமல் தனது கட்டுக்குள்ளேயே வாழ வேண்டும் என்று நிர்பந்தித்தான்.

## மெஹருன்னிஷா “குலா” கொடுத்தல்

ஹசனின் அடக்குமுறையும், அராஜகமும், கட்டுப்பாடும் அத்துமீறலும் நாளுக்கு நாள் எல்லை மீறும் பொழுது மெஹர் துணிந்து நடவடிக்கை எடுத்தாள். இஸ்லாமிய சட்டத்தைப் பயன்படுத்தி மெஹர் ஹசனுக்கு “குலா” கொடுத்தாள். மெஹரின் உரிமைகளை ஹசன் அங்கீகரிக்கவில்லை. ஹசன் தனது உரிமையை பயன்படுத்தி இரண்டாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழ்க்கை நடத்த தொடங்கிவிட்டான்.

காலம் காலமாக மூளையில் ஏற்றி வைத்த பெண்ணடிமைத் தனத்தை உடைத்தெறிய இன்னும் பெரும்பான்மையானப் பெண்களுக்கு அந்த மனப்பான்மையே வரவில்லை என்பதுதான் இந்த அவலத்திற்கு காரணம் என்று சல்மா இக்கதை மாந்தர் மூலம் விளக்குகிறார். பெரியாரும் பெண்களின் நிலையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

“எனவே பெண் மக்கள் அடிமையானது ஆண் மக்களாலேயே தான் ஏற்பட்டது என்பதும், அதுவும் ஆண்மையும், பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்படுத்துதல் எல்லா ஆண்களும் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், அதோடு பெண் மக்களும் இதை உண்மை என்றே நினைத்துக் கொண்டு வந்த பரம்பரை வழக்கத்தால் பெண் அடிமைக்குப் பலம் அதிகம் ஏற்பட்டு இருக்கிறது என்பதும் நடுநிலை பெண்களுக்கும், ஆண்களுக்கும் யோசித்துப் பார்த்தால் விளங்காமறபோகாது (Karuvoor Kannal Munnaivar, 2019).”

## மெஹரின் மறுமணம்

ஹசனின் அடக்குமுறைக்குள்ளிருந்து வெளியே வர மெஹர் அவனுக்குக் குலா கொடுத்து அவனை விட்டு விலகினாள். மெஹரின் தாய் ஆசியம்மாவின் வற்புறுத்துதலாலும், பழிவாங்கும்

எண்ணத்தாலும் மெஹர் அபிபுல்லாவை இரண்டாவது திருமணம் செய்து கொண்டாள். இதற்கு பிறகாவது ஹசன் ஒடுங்குவான் என்று மெஹர் நினைத்தாள். ஆனால் அவன் தனது ஆளுமையை விட்டு கீழே இறங்கவில்லை.

## ஜமாத் தலைவரின் கோபம்

ஆண் ஆதிக்கத்தை ஜமாத் தலைவரே ஆதரிக்கும் பொழுது இஸ்லாமிய பெண்களுக்கு எவ்வாறு உரிமை கிடைக்கும் என்று கேட்கிறார் (Thanthai Periyar, 2020). ஜமாத் தலைவர் ஹசனின் இரண்டாவது திருமணத்தை அங்கீகரிக்கிறார். ஆனால் மெஹரைக் கடிந்து கொள்கிறார். சம்பிரதாயத்திற்கு இஸ்லாமிய சட்டத்தை கடைப்பிடிக்கும் ஜமாத் தலைவர்கள் எக்காலத்திலும் பெண்களின் விடுதலைக்கு உதவ மாட்டார்கள் என்பதை உணர்த்தவே சல்மா கதை இக்கதைமாந்தரை படைத்துள்ளார்.

## சாஜிதா பற்றி

மெஹரின் மகள் சாஜிதா. மெஹரின் மகன் அஷ்ரப். மெஹர் குலா கொடுத்ததால் இரு பிள்ளைகளையும் வளர்க்கும் உரிமை தந்தைக்கே என்று ஜமாத் தலைவர்கள் சொல்லிவிட்டார்கள். இதனால் மெஹர் தன் மகளையும், மகனையும் பார்க்காமல் துடித்தாள். எவருடைய அரவணைப்பும் தன் அம்மாவின் அரவணைப்பைப் போல் இல்லை என வருந்தினாள். சாஜிதாவிற்கு மருத்துவப் படிப்பிற்கு படிக்க வேண்டும் என்று விருப்பம். ஆனால் ஹசன் வழக்கம் போல் முட்டுக்கட்டை இட்டான். இதனால் சாஜிதாவின் ஆசை கலைந்துவிட்டது.

## பெண் கல்வி

பெண் கல்வியைப் பற்றி எண்ணற்ற அறிஞர்கள் எண்ணற்ற கருத்துக்களை கூறுகிறார்கள். இதற்கு சான்று பகரும் விதமாக கூறுகிறார் (Thanthai Periyar, 2020; Seeman Ilayaraja Munnaivar, 2017).

"பெண் கல்வியே கூடாது என்ற காலத்தில் வாழ்ந்த பெரியார் ஈ.வெ.ரா. ஆண்களை விட பெண்கள் கல்வியை கற்க வேண்டும் என்று கூறினார் (Thanthai Periyar, 2020). தனியுரிமை உலகில் பெண்கள் சுதந்திரம் வேண்டும் என்பவர்கள் பெண்களை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். பெண்பிள்ளைகளுக்கு செலவு, பெண் கல்வியை வலியுறுத்தியே சல்மா இப்புதினத்தில் சாஜிதா கதாபாத்திரத்தின் மூலம் தன் தேவைகளை வெளிப்படுத்துகின்றார். பெண்கள் கல்வியறிவு பெற்று விளங்கினால் ஆண்களை மிஞ்சும் சுய அறிவை பெறுவார்கள் என்று உணர்த்துகிறார் (Salma, 2018; Seeman Ilayaraja Munnaivar, 2017).

## பர்வீன் பற்றி

ஹசனின் தங்கை பர்வீன். இவள் வாழாவெட்டியாக வீட்டில் அடைந்து கிடக்கிறாள். அவளுக்கு வாய்த்த கணவன் ரஹீம். இவன் ஆண்மை இல்லாதவனாக விளங்கினான். இதை பர்வீனால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ரஹீமோடு தனது வாழ்க்கை முடிந்துவிடும் என்று நினைத்த பர்வீன் தற்போது ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கினாள். இதையும் அண்ணன் ஹசன் கடிந்துரைத்தான். பர்வீன் சுய உதவி குழுவில் சேர்ந்தாள். அங்குள்ள மேல் அதிகாரி தட்சிணாமூர்த்தி முதல்முதலாக தனக்கு பிடித்த ஓர் ஆண் மகனை பார்ப்பதாகவே அவள் உணர்ந்தாள்.

பர்வீன் போன்ற பெண்கள் தங்கள் ஆசைகளை எல்லாம் மனதிற்குள்ளாகவே பூட்டி வைத்து கற்பனை செய்து தங்கள் வாழ்க்கையை வீட்டுச் சிறைக்குள்ளாகவே முடித்துக் கொள்கிறார்கள். எவ்வித விடுதலையுமின்றி, உரிமையுமின்றி தங்களின் காம இச்சைகளை அடக்கி கொண்டு இளமையை பலியாக்கி ஏக்கத்திலேயே மடிந்து போகிறார்கள்.

## முடிவுரை

இரண்டாம் ஜாமங்களின் கதை, மனாமியங்கள் என்று இரு புதினங்களில் வரும் பெண் கதாபாத்திரங்கள் தங்களது உரிமைகளையும், விடுதலையும் இழந்தவர்களாக உள்ளனர். இஸ்லாமிய சட்டம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டாலும் இன்னும் அதனை சாதகமாக்கி இன்றைய ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றே சல்மா கூறுகிறார். இயலாமையும், இல்லாமையும், மூடநம்பிக்கையும், பொருளாதாரப் பின்னடைவும், முட்டாள்தனமும் பெண்களை அடிமைகளாக ஆக்கி விட்டன என்றே கூறலாம். ஆண்டாண்டு காலமாய் ஊறிப்போன பழைய சடங்குகளும், சம்பிரதாயங்களும் பெண்களின் மூளையை மழுக்கி அவர்களது உரிமைக்கு தடை போடுகின்றன என்றே சல்மா கூறுகிறார். குடும்ப உறவுகளில் ஆண்களின் அத்துமீறலும், ஆணாதிக்கமும் பெண்களின் வாழ்க்கையை நிலைகுலையச் செய்கின்றன. ஆண் வர்கத்தின் எல்லாவித அடக்குமுறைக்கும் பெண்களே உட்படுகிறார்கள். பெண்களின் உடற்கூறும், அதன் தன்மையும் ஆண்களின் ஆதிக்கத்திற்கு சாதகமாகவே அமைந்து இருக்கின்றன. பெண்களின் உழைப்புத் திறனும், சிந்தனையும் உலக மேம்பாட்டிற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் எல்லா வகையிலும் உதவும் என்ற எண்ணம் ஆண்களுக்கு இல்லாமலேயே போய்விடுகின்றன. பெண்கள் கல்வியும், உரிமையும் பெற்று விட்டால் ஆண்கள் தங்களின் அதிகாரத்தை செலுத்த முடியாது. பெண்களுக்கான பலவீனங்களும், பாதிப்புகளும் நீங்கி எல்லாவித உரிமையும் விடுதலையும் அடைய வேண்டும் என்றால் பெண்களே தான் முடிவு எடுக்க வேண்டும் என்ற கருத்தை இப்புதினங்கள் மூலமாக சல்மா கூறுகிறார். இப்புதின கதைமாந்தர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருப்பதால் அவர்களுக்கான தேவைகளும் ஆசைகளும் நியாயங்களும் வெளிப்படையாக விளக்கப்பட்டுள்ளன என்றே கூறலாம்.

## References


Chandrasekarn, R. Munnaivar, Saravanan, P., (2019) Bharathidasan Kavidhaigalil Penniyamum Periyarum, Naam Thamizhar Pathippagam, Chennai, India.

Karuvoor Kannal Munnaivar, (2019) Pen Viduthalai Periyarin Parvai, Chennai, India.

Mohamed Maideen Ulavi, K.M., (2018) Penn Urimai Penum Islam, Yasir Publication, Madurai, India.

Salma, (2018) Irandaam Jaamangalin Kathai, Kalachuvadu Publication, Nagercoil, India.

Seeman Ilayaraja Munnaivar, (2017) Periyarin Pen Kalvi Sinthanaigal, TISSL Publication, Trichy, India.

Thanthai Periyar, (2020) Pen Ean Adimaiyanaal, Paguthrivu Noorpathippu Kazhagam, Erode, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License